செ.வெ.எண். 532 நாள். 5 .7.2008

# பத்திரிகைச் செய்தி

தமிழ் நாட்டிற்கு, ஹஜ் 2008–ற்காக மும்பை, மத்திய ஹஜ் குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட ஒதுக்கீடு 3181 ஆகும். ஆனால், 10,508+30(குழந்தைகள்) விண்ணப்பங்கள் புனிதப் பயணிகளிடமிருந்து தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவில் பெறப்பட்டுள்ளன. இந்த ஒதுக்கீட்டிற்கான புனிதப் பயணிகளைத் தெரிவு செய்ய குலுக்கல் (குறா) நடத்துமாறு இக்குழுவினை மும்பை, மத்திய ஹஜ் குழு கேட்டுக் கொண்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஹஜ் பயணம் மேற்கொள்ள அனைத்து விண்ணப்பங்களையும் ஏற்கும் வகையில் கூடுதல் ஒதுக்கீடு வழங்க, மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

2. இதற்கிடையில், தமிழ் நாடு மாநில ஹஜ் குழு, மும்பை, மத்திய ஹஜ் குழுவால் அளிக்கப்பட்ட ஹஜ் 2008–ற்கான ஒதுக்கீடு, அதாவது 3181 இடங்களுக்கு புனிதப் பயணிகளைத் தெரிவு செய்ய குலுக்கல் (குறா) நடத்த முடிவு செய்துள்ளது. இந்தக் குலுக்கல் நிகழ்ச்சி, 10–7–2008 வியாழக்கிழமை அன்று காலை 10.30 மணியளவில், சென்னை, இராயப்பேட்டை, புதுக்கல்லூரியிலுள்ள, ஆனைக்கார் அப்துல் ஷுக்கூர் அரங்கத்தில் நடைபெறும். மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் வக்ஃப் அமைச்சர் மற்றும் தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவின் தலைவர் ஆகியோர் தலைமை தாங்கி இந்நிகழ்ச்சியை துவக்கி வைக்க உள்ளனர்.

3. ஹஜ் 2008–ற்காக, தமிழ் நாடு மாநில ஹஜ் குழு மூலமாக விண்ணப்பித்துள்ள புனிதப் பயணிகள் அல்லது குழுவிலுள்ள உறுப்பினர்கள் இக்குலுக்கலில் (குறாவில்) கலந்து கொண்டு நிகழ்ச்சியினைச் சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**